22 DEC
EASTERN UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்
## இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு
## 2013 / 2014

# CRS 2133 Study of Selected Tamil Religious Texts

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

பகுதி I இல் இருந்து ஏதேனும் இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

1) (அ) தமிழில் எழுந்த சமய இலக்கியங்களுள் ஐந்தினைப் பட்டியற்படுத்தி அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ஆ) "சமயக் கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதில் தமிழ்சமய இலக்கியங்கள் மகத்தான பங்களிப்பினைப் புரிகின்றன". இக்கூற்றின் பொருத்தப்பாடு தொடர்பான உமது கருத்துக்களை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

2) (அ) மாணிக்கவாசகருக்கே உரித்தான தனித்துவப் பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ஆ) இறைவனைப் பிரிந்த மாணிக்கவாசகரின் தவிப்பினை திருவாசகம் வெளிப்படுத்தி நிற்குமாற்றினை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

3) (அ) மணிமேகலையின் ஆசிரியராகிய சீத்தலைச்சாத்தனாரைச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(ஆ) மணிமேகலை என்ற இலக்கியத்தின் வாயிலாக சாத்தனார் வெளிப்படுத்துகின்ற பௌத்தசமயப் போதனைகளைச் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

## பகுதி - II

4) சங்கரருடைய அத்வைத முத்தியினைத் தாயுமான சுவாமிகளுடைய "எங்கும் நிறைகின்ற பொருள்" என்ற பாடற்பகுதிகளின் வாயிலாக அறிந்துகொள்ளலாம். என்ற கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

5) "சூசையும் மரியாளும் இல்லறத்தில் இணைந்த போதிலும் துறவு வாழ்வையே கடைப்பிடித்தனர்" என்பதனைத் தேம்பாவணி வெளிப்படுத்தும் வகையினைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

6) உமறுப்புலவர் அவர்கள் இஸ்லாமிய சமயக் கருத்துக்களைத் தமது சீறாப்புராணத்தின் ஊடாக வெளிப்படுத்துமாற்றினை எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)

7) மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தின் சிவபுராணம் என்ற பாடற் பகுதியிலே இறைவனின் மேன்மையினை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பதனை ஆராய்க. (20 புள்ளிகள்)